

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் நல்லாட்சியின் சிறப்பான செயல்பாடுகளால் ஈர்க்கப்பட்டு, அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் தெற்கு ஒன்றியம், மேலூர் மற்றும் மருதூர் ஊராட்சிகளைச் சேர்ந்த அ.தி.மு.க. மற்றும் த.வெ.க.வினர் 20 க்கும் மேற்பட்டோர் அக்கட்சியில் இருந்து விலகி போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் முன்னிலையில் தங்களை கழகத்தில் இணைத்துக் கொண்டனர். அவர்களுக்கு கழக இருவண்ண ஆடை அணிவித்து வரவேற்றார். க.சொ.க.கண்ணன், ஆர்.கலியபெருமாள், கே.சி.லூயிகதிரவன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் உடனிருந்தனர்.



தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டையில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை சார்பில் தியாகி ஸ்ரீமான் வை.நாடிமுத்து பிள்ளை அவர்களுக்கு ரூபாய் 38 இலட்சம் மதிப்பில் திருவுருவச் சிலை அமைப்பதற்காக தொழில்துறை அமைச்சர் முனைவர்.டி.ஆர்.பி.ராஜா அடிக்கல் நாட்டினார். மாவட்டப் பொறுப்பாளர் தி.பழனிவேல், சட்டமன்ற உறுப்பினர்கள் கா.அண்ணாதுரை, என்.அசோக்குமார் உடன் உள்ளனர்.

### தூத்துக்குடி மாவட்டம் – எஸ்.குமாரபுரம் கிராமத்தில் நிகழ்ந்த

# சாலை விபத்தில் உயிரிழந்த மூன்று பெண்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் -நிதியுதவி !

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, டிச.28-

**தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் வட்டம், எட்டயபுரம் நெடுஞ்சாலை, எஸ்.குமாரபுரம் கிராமத்தில் நிகழ்ந்த சாலை விபத்தில் உயிரிழந்த மூன்று பெண்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவியை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் வட்டம், எட்டயபுரம் நெடுஞ்சாலை, எஸ்.குமாரபுரம் எல்லைக்குட்பட்ட கிராமத்தில் நேற்று முன்தினம் (25.12.2025) மாலை சுமார் 4.30 மணியளவில் தூத்துக்குடியிலி ருந்து இருக்கன்குடி மாரியம்மன் கோவிலுக்குச் சென்று கொண்டிருந்த பாதயாத்திரிகள் மீது பின்னால் வந்த கார் ஒன்று எதிர்பாராதவிதமாக மோதிய விபத்தில் திருச்செந்தூர், வீரபாண்டி பட்டணத்தைச் சேர்ந்த திருமதி. சுந்தர ராணி (வயது 60) க/பெ.ராமமூர்த்தி, திருமதி.இசக்கியம்மாள் (வயது 55) க/பெ.வடிவேல் மற்றும் கீழ திருச்செந்தூர், கரம்பாவிளையைச் சேர்ந்த திருமதி.கஸ்தூரி (வயது 55) க/பெ.சுந்தரம் ஆகிய மூன்று பெண்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இந்த விபத்தில் உயிரிழந்த மூன்று பெண்களின் குடும்பத்தினருக்கும், அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

### வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த முகாம்! மயிலாடுதுறை மாவட்ட

# ஒன்றிய, நகர. பேரூர் செயலாளர்கள் பணியில் ஈடுபட வேண்டும்!

## மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் அறிக்கை!



மயிலாடுதுறை, டிச. 28 –

மயிலாடுதுறை மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த முகாமில் கழகத்தில் கழகத்தினர் முனைப்பாக ஈடுபட வேண்டும். நாகை மாவட்டச் செயலாளர் நிவேதா எம்.முருகன் கூறியுள்ளார்.

இதுகுறித்து மயிலாடுதுறை மாவட்டக் கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் வெளியிட்டு அறிக்கையில் கூறியிருப்பதாவது: இந்திய தேர்தல் ஆணையத்தால் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு பணிகள் நடைபெற்று தற்பொழுது வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது. இதையடுத்து தேர்தல் ஆணையம் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணிக்கு வாக்குச் சாவடிகளில் சிறப்பு முகாம், இன்று (28.12.2025 – ஞாயிற்றுக்கிழமை) மற்றும் 3.1.2026 சனிக்கிழமை, 4.1.2026 ஞாயிற்றுக்கிழமை ஆகிய தேதிகளில் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள அனைத்து வாக்குச்சாவடிகளிலும் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்த பணிக்கு வாக்குச்சாவடி அலுவலர்களால் விண்ணப்பங்கள் பெற உள்ளது.கழக நிர்வாகிகளுடன் வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (பி.எல்.ஏ.2), வாக்குச்சாவடி டிஜிட்டல் ஏஜெண்டுகள் (பி.டி.ஏ), வாக்சாவடி உறுப்பினர்கள் (பி.எல்.சி), கிளை, வார்டு செயலாளர்கள், நிர்வாகிகள், கழகத்தினர் வாக்காளர் பட்டியலை மீண்டும் ஒருமுறை சரிபார்த்து வாக்குச்சாவடி சிறப்பு முகாமில் விடுபட்ட வாக்காளர்களையும், புதிதாக சேர்க்க வேண்டிய வாக்காளர்களையும், கழக ஆதரவு வாக்காளர்களையும் சேர்க்கவும், இறந்த வாக்காளர்கள், நிரந்தரமாக குடிபெயர்ந்த வாக்காளர்கள், போலி வாக்காளர்களை நீக்கிடவும், பெயர், முகவரி திருத்தம் செய்திடவும் உரிய படிவத்தை நிரப்பி வாக்குச் சாவடி அலுவலர்களிடம் வழங்கிட வேண்டும். இந்தப் பணி சிறப்பாக அமைந்திட மயிலாடுதுறை மாவட்டத்திலுள்ள ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் வாக்குச்சாவடி நிலை முகவர்கள் உள்ளிட்டவர்களிடம் உரிய அறிவுறுத்தல் வழங்கி 4 நாட்கள் நடைபெறும் சிறப்பு முகாமில் சிறப்பாக பணியாற்றிய வேண்டுமென்றும், இந்த பணியில் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் முன்னாள் பிரதிநிதிகள், நகர மன்ற உறுப்பினர்கள், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள்,

வாக்குச்சாவடியில் நடைபெற உள்ள வாக்காளர் பட்டியல் தீவிர சிறப்பு முகாமில் பங்கேற்று பணியாற்ற வேண்டும். ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் வாக்காளர் பட்டியல் தீவிர சிறப்பு திருத்த முகாமில் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்பட்ட விவரங்களை தலைமைக் கழகத்திற்கு அனுப்பிடும் வகையில் மாவட்டக் கழகத்திடம் பட்டியலை வழங்கிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அந்த அறிக்கையில் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் கூறியுள்ளார்.

### பல்லடத்தில் நடைபெறும் “வெல்லும் தமிழ்ப்பெண்கள்”

# மேற்கு மண்டல மாநாட்டில் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்பு!

## கழக மேற்கு மண்டலப் பொறுப்பாளர் வி.செந்தில் பாலாஜி தலைமையில்

கோவை, டிச. 28–

பல்லடத்தில் நடைபெறும் “வெல்லும் தமிழ்ப்பெண்கள்” மேற்கு மண்டல மாநாட்டில் கழக மேற்கு மண்டலப் பொறுப்பாளர் வி.செந்தில் பாலாஜி தலைமையில் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்பதெனவும், மாநாட்டில் பங்கேற்க 29 ந்தேதி கோவை வருகை தரும் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு கோவை விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு அளிப்பது எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஒருங்கிணைந்த கோவை மாவட்டக் கழகப் பொறுப்பாளர், செயலாளர்கள், பகுதிக் கழகப் பொறுப்பாளர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் பீளமேடு தனியார் ஓட்டலில் கழக மேற்கு மண்டலப் பொறுப்பாளரும், முன்னாள் அமைச்சருமான வி.செந்தில் பாலாஜி தலைமையில் நடைபெற்றது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் நாளை (29.12.2025 – திங்கட்கிழமை) பல்லடத்தில் நடைபெறும் நடைபெற உள்ள “வெல்லும் தமிழ்ப்பெண்கள்” மேற்கு மண்டல மாநாட்டில் கலந்து கொள்ள கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் சென்னை விமான நிலையத்தில் இருந்து காலை 10.00 மணிக்கு புறப்பட்டு, காலை 11.00 மணிக்கு கோவை விமான நிலையம் வருகை தர உள்ளார்கள். அவருக்கு கோவை விமான நிலையத்தில் கழக மேற்கு மண்டலப் பொறுப்பாளர் வி.செந்தில் பாலாஜி தலைமையில் உற்சாக வரவேற்பு அளிப்பது எனவும், பல்லடத்தில் நடைபெறும் “வெல்லும் தமிழ்ப் பெண்கள்” மேற்கு மண்டல மாநாட்டில் கழக 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் கோவை மாநகர் மாவட்டப் பொறுப்பாளர் துரை. செந்தமிழ்ச் செல்வன், வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி, தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் தளபதி முருகேசன், கழக மாணவரணி செயலாளர், வழக்கறிஞர் இரா.ராஜீவ் காந்தி, கழக தகவல் தொழில்நுட்ப அணி இணைச் செயலாளர் டாக்டர். மகேந்திரன், கழக நெசவாளர் அணி செயலாளர் சிந்து ரவிச்சந்திரன், சட்டத்துறை இணைச் செயலாளர் வழக்கறிஞர் அருள்மொழி உள்பட சட்டமன்றத் தொகுதி தேர்தல் பார்வையாளர்கள், பகுதிக் கழக பொறுப்பாளர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.




குன்னூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பூத் எண் 155 வார்டு14, மற்றும் பூத் எண் 156 வார்டு15 உட்பட்ட பகுதிகளில் குன்னூர் நகரக் கழக செயலாளர் எம்.இராமசாமி தலைமையில் தமிழ்நாடு அரசு தலைமைக் கொறடாவும் கழக தேர்தல் பணிக்குழு செயலாளர் கா.ராமச்சந்திரன் கலந்து கொண்டு 2026 தேர்தலுக்கான ஆக்கப் பணிகள் குறித்து மற்றும் பூத் நிர்வாகிகளுக்கு ஆலோசனைகள் வழங்கினார். உடன் மாநில சிறுபான்மையினர் பிரிவு துணை செயலாளர் இரா.அன்வர்கான், பொதுக்குழு உறுப்பினர் சதக்கத்துல்லா, அவைத் தலைவர் பி.தாஸ், தலைமைக் கழக பேச்சாளர் ஜாகிர்உசேன், மாவட்டப் பிரதிநிதி மணிகண்டன், சையது மன்சூர், கோவர்தன், பாலன், நாகராஜ், முருகேஷ், லட்சுமணன், ஜானகி, கோபால், ராணி, மோகன், ஜோசப், ராஜேஷ் நிக்கோலஸ், சந்தோஷ் குமார், செல்வி உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த முகாம்! நாகை மாவட்ட

# ஒன்றிய, நகர. பேரூர் செயலாளர்கள் பணியில் ஈடுபட வேண்டும்!

## மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் அறிக்கை!



நாகை, டிச. 28 -

நாகை மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த முகாமில் கழகத்தில் கழகத்தினர் முனைப்பாக ஈடுபட வேண்டும். நாகை மாவட்டச் செயலாளர் என்.கௌதமன் கூறியுள்ளார்.

இதுகுறித்து நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவர் என். கௌதமன் வெளியிட்டு அறிக்கையில் கூறியிருப்பதாவது இந்திய தேர்தல் ஆணையத்தால் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு பணிகள் நடைபெற்று தற்பொழுது வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது. இதையடுத்து தேர்தல் ஆணையம் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணிக்கு வாக்குச் சாவடிகளில் சிறப்பு முகாம் நேற்று 27.12.2025 சனிக்கிழமை, இன்று 28.12.2025 ஞாயிறுக்கிழமை மற்றும் 3.1.2026சனிக்கிழமை, 4.1.2026 ஞாயிற்றுக்கிழமை ஆகிய தேதிகளில் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து நாகை மாவட்டத்தில் உள்ள அனைத்து வாக்குச்சாவடிகளிலும் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்த பணிக்கு வாக்குச்சாவடி அலுவலர்களால் விண்ணப்பங்கள் பெற உள்ளது.கழக நிர்வாகிகளுடன் வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (பி.எல்.ஏ.2), வாக்குச்சாவடி டிஜிட்டல் ஏஜெண்டுகள் (பி.டி.ஏ), வாக்சாவடி உறுப்பினர்கள் (பி.எல்.சி), கிளை, வார்டு செயலாளர்கள், நிர்வாகிகள், கழகத்தினர் வாக்காளர் பட்டியலை மீண்டும் ஒருமுறை சரிபார்த்து வாக்குச்சாவடி சிறப்பு முகாமில் விடுபட்ட வாக்காளர்களையும், புதிதாக சேர்க்க வேண்டிய வாக்காளர்களையும், கழக ஆதரவு வாக்காளர்களையும் சேர்க்கவும், இறந்த வாக்காளர்கள், நிரந்தரமாக குடிபெயர்ந்த வாக்காளர்கள், போலி வாக்காளர்களை நீக்கிடவும், பெயர், முகவரி திருத்தம் செய்திடவும் உரிய படிவத்தை நிரப்பி .வாக்குசாவடி அலுவலர்களிடம் வழங்கிட வேண்டும்.இந்தப் பணி சிறப்பாக அமைந்திட ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் வாக்குச்சாவடி நிலை முகவர்கள் உள்ளிட்டவர்களிடம் உரிய அறிவுறுத்தல் வழங்கி 4 நாட்கள் நடைபெறும் சிறப்பு முகாமில் சிறப்பாக பணியாற்றிய வேண்டுமென்றும், இந்த பணியில் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள்,பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு கழக செயலாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் முன்னாள் பிரதிநிதிகள், நகர மன்ற உறுப்பினர்கள், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள்,

வாக்குச்சாவடியில் நடைபெற உள்ள வாக்காளர் பட்டியல் தீவிர சிறப்பு முகாமில் பங்கேற்று பணியாற்ற வேண்டும். ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் வாக்காளர் பட்டியல் தீவிர சிறப்பு திருத்த முகாமில் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்பட்ட விவரங்களை தலைமை கழகத்திற்கு அனுப்பிடும் வகையில் மாவட்ட கழகத்திடம் பட்டியலை வழங்கிடுமாறு கேட்டுக்கொள்கிறேன் :இவ்வாறு அந்த அறிக்கையில் நாகை மாவட்ட கழக செயலாளர் என்.கௌதமன் கூறியுள்ளார்.



புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையில் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.க. மற்றும் விராலிமலை சட்டமன்ற தொகுதி சார்பில் விராலிமலையில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில் எஸ்.எம்.மதிவதனி அஞ்சுகம் பூபதி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கோவை ப. கோபால்
### டிசம்பர் 28 (1972)



**கோவை நகரக் கழகச் செயலாளராகவும் – கோவை மேற்கு தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, சட்டமன்ற உறுப்பினராகவும் பணியாற்றியவர்.**

**கழகம் நடத்திய அனைத்து அறப்போராட்டங்களிலும் கலந்து கொண்டு பலமுறை சிறை சென்றவர்.**

**“அண்ணா வழியில் அயராது உழைத்து கழகத்தின் கொள்கைகளை உள்ளத்தில் பதியவைத்து, எந்தச் சூழ்நிலையிலும் கட்டுப்பாட்டை மீறாமல் பணியாற்றிய அன்புத் தங்கம்” என தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**